# செய்திமடல்

**NEWSLETTER**

பதிப்பு 2

வைகாசி 2020

## 04.06.2020

## சத்தியவான் அறக்கட்டளையின் மூன்றாவது ஆண்டு நிறைவு நாள்

சத்தியவான் அறக்கட்டளை தனது மூன்றாவது ஆண்டினை வரும் ஆனி மாதம் 4ஆம் திகதி 2020 அன்று நிறைவு செய்கிறது. அது தன்னை சிறப்பாகச் செதுக்கி தனக்கென ஒரு பாதை அமைத்து அப்பாதையில் சிறப்புறப் பயணித்துக் கொண்டிருக்கிறது.

"இவ்வுலகில் பிறந்த நீங்கள் அதற்கு அடையாளமாக ஏதேனும் விட்டுச் செல்லுங்கள். இல்லையேல் உங்களுக்கும் மரங்கள் கற்களுக்கும் வேறுபாடு இல்லாமற் போய்விடும்" எனும் சுவாமி விவேகானந்தரின் பொன்மொழிக்கமைய சத்தியவான் அறக்கட்டளை தன் தாய்மண்ணின் அடையாளங்களில் ஒன்றாக இன்பர்சிட்டி சிறுவர் பூங்காவினை அமைத்துள்ளதையிட்டு இந்நாளில் மகிழ்ச்சியடைகிறது. இப்பூங்காவானது எமதூர் மக்கள் மட்டுமல்லாது அயலூரவர்களுக்கும் பயனுள்ளதாக இருக்கிறது என்பதோடு அதிகமான மக்கள் இதனைப் பாவிக்கிறார்கள் என்பதும் எமக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது.

தனிநபர் வேலைத்திட்டங்களில் தனித்துவத்துடன் பணியாற்றி இலங்கையில் வாழும் பல குடும்பங்களின் வறுமை நிலையை மாற்றியமைத்துள்ளது. இதில் பெண் தலைமைத்துவக் குடும்பம், வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பங்கள் என பலதரப்பட்டவர்களின் வாழ்க்கையை அவர்களின் உழைப்பால் உயர்த்துவதற்கான தொழிலினை ஏற்படுத்திக் கொடுத்து அவர்களுக்கென ஒரு இருப்பை உறுதிப்படுத்தியதையிட்டு சத்தியவான் அறக்கட்டளை தனது மூன்றாவது நிறைவாண்டில் மகிழ்ச்சியடைகிறது.






மூன்றாம் ஆண்டு நிறைவுச் செய்தி – பக்கம் 1

அறக்கட்டளையின் செயற்பாடுகள் – பக்கம் 2

நாட்டு நடப்புகள் – பக்கம் 3

# அறக்கட்டளையின் செயற்பாடுகள்

## கொறோணா உதவித்திட்டம் (COVID 19 Aid)

இன்பர்சிட்டி சனசமூக நிலையத்தினரால் மேற்கொள்ளப்பட்ட கொறோணா உலர் உணவுத்திட்டமானது இலங்கை, இன்பர்சிட்டிக் கிராமத்தில் ஏற்பட்டிருந்த அசாதாரண நிலையின் போது இடர்பட்ட பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் பெற்றோரை இழந்தோர்,



ஊனமுற்றோர் ஆகியவர்களுக்கு அளிக்கப்பட்ட உதவியாகும். இவ்வுதவித் திட்டத்திற்கு சத்தியவான் அறக்கட்டளை 200,000.00 (2 இலட்சம்) இலங்கை ரூபாய்களை 01.04.2020 அன்று வழங்கியிருந்தது..

## தனிநபர் வேலைத்திட்டம்



திரு நடராசா சிவனேஸ்வரராசா அவர்கள் இன்பர்சிட்டிக் கிராமத்தைச் சேர்ந்தவர் ஆவார். ஐந்து பிள்ளைகளின் தந்தையான இவர் சுனாமி அனர்த்தங்களினால் மிகவும் பாதிப்பிற்குள்ளாகி ஒரு மகளை இதன் போது இழந்ததுடன் தன்னிடமிருந்த தொழில் உபகரணங்களையும் இழந்து சுயமாகத் தொழிலினை செய்ய முடியாது இருந்தவர்.

சுனாமி அனர்த்தத்தின் பின்னர் சிறிய கட்டுமரத்தில் அல்லது இன்னொருவரின் கீழ் தனது தொழிலினைச் செய்து வந்திருந்தார். இதன் மூலம் ஈட்டும் வருமானம் குடும்பத்தை நடத்துவதற்குப் போதுமானதாக இல்லாததனால் சத்தியவான் அறக்கட்டளையின் தனிநபர் சுயதொழில் உதவிமூலம் தனக்கென ஒரு தொழிலினை கடந்த தை மாதம் (January 2020) பெற்றுக்கொண்டார்.

அறக்கட்டளையின் உதவி கிடைத்த பின்னர் தனது குடும்பம் நன்றாக இருப்பதாகவும் தனக்கிருந்த கடன்களைக் கொஞ்சம் கொஞ்சமாகத் திருப்பிக் கொடுக்கக்கூடியளவிற்கு உழைப்பதாகவும் வறுமையில் வாடாது இருப்பதாகவும் கூறியுள்ளார்.

தனது குடும்பத்திற்கு சத்தியவான் அறக்கட்டளை செய்திருக்கும் உதவியானது தமது வாழ்க்கையையே மாற்றியமைத்துள்ளது எனக் கூறியுள்ளமை எமக்குப் பெரும் மகிழ்வைத் தருகிறது.



# நாட்டு நடப்புகள்



கொறோணா தொற்றுநோய் பிரித்தானியா முழுவதும் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதுவரையிலும் முப்பத்தெண்ணாயிரத்தி-ற்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர்.

அரசினால் விதிக்கப்பட்ட கட்டுப்பாட்டு விதிகள் சிறிது தளர்க்கப்பட ஆரம்பித்துள்ளன. இந் நேரத்தில் சமூக இடைவெளியைக் கடைப்பிடித்தல், கைகளை அடிக்கடி சுத்தப்படுத்தல், வீட்டையும் தன்னையும் சுத்தமாக வைத்திருத்தல், ஆரோக்கியமான உடல் மன நிலைகளைப் பேணுதல் போன்றன முக்கியமானவை என அறிவுறுத்தப்பட்டுள்ளன.




மாணவரின் கல்வியில் பின்னடைவு ஏற்பட்டுள்ளது எனக் கூறப்பட்டுள்ளது. கேம்பிறிட்ஜ் (Cambridge) பல்கலைக்கழகம் தமது பாடங்கள் அனைத்தும் 2021 கோடைகால விடுமுறை வரைக்கும் இணையவழிக் கல்வியாகவே நடைபெறும் என அறிவித்துள்ளது.

நாட்டின் பொருளாதாரம் பின்னடைந்துள்ளது. பெரிய பெரிய நிறுவனங்கள் தொழிலாளர் எண்ணிக்கையை குறைப்பதனால் இதுவரை இல்லாத அளவிற்கு வேலையில்லாதோர் எண்ணிக்கை உயர்ந்துள்ளது.

தற்போது கொறோணாவுடனேயே நாம் வாழ்ந்தாக வேண்டும் எனும் நிலை உருவாகியுள்ளது.



www.saththiyavantrust.com +44 7858 080770 saththiyavantrust@gmail.com